# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 148/2022 தேதி- 19.08.2025

(P.W.1) - வேலுதாஸ்

**5 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது அம்மாவிற்கு மாதவியம்மாள் என்றும் மாதவி பிள்ளை என்றும் பெயர் உள்ளது என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு உரிமைப்பட்ட 3 சென்ட் சொத்தை 2007 ஆம் வருடம் ஆவண எண் 2936 செட்டில்மெண்ட் ஆவணப்படி கிருஷ்ணகுமாருக்கு கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எனது அம்மாவின் சகோதரியான கார்த்தியாயினி அம்மா, சகோதரர்கள் ராமன்பிள்ளை, குமாரபிள்ளை ஆகியோருக்கு 3 சென்ட் வீதம் உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. கார்த்தியாயினிக்கு உரிமைப்பட்ட 3 சென்ட் சொத்தை 2009 ஆம் வருடம் 3990 செட்டில்மெண்ட் ஆவணப்படி அவரது மகள் கீதா குமாரிக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ராமன்பிள்ளைக்கு உரிமைப்பட்ட 3 சென்ட் சொத்தை 2010 ஆம் வருடம் 1629 செட்டில்மெண்ட் ஆவணப்படி தன்னுடைய மகள் சவுதான்மினி என்பவருக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல.

சவுதான்மினி அவருக்கு உரிமைப்பட்ட 2 . 770 சென்ட் சொத்தை 2013 ஆம் வருடம் 1513 கிரையப் பத்திரப்படி ஜிஎஸ். விஜயகுமார் என்பவருக்கு விலையாக கொடுத்தார் என்றால் சரியல்ல. கீதா குமாரி அவருடைய 3 சென்ட் சொத்தை 2013 ஆம் வருடம் 3269 கிரையப்பத்திரப்படி T.S.விஜயகுமாருக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. T.S.விஜயகுமார் 2020 ஆம் வருடம் 3 சென்ட் சொத்தை 2768 கிரையப்பத்திரப்படி இந்த வழக்கின் 5 ஆம் பிரதிவாதியினுடைய அம்மா ரமனிபாய்க்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த சொத்தில் ரமனிபாய் வீடு கட்டியிருந்தார் என்கிற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு சொந்தமல்லாத இடத்தில் வீடு வைத்திருந்ததால்தான் இந்த வழக்கு போடப்பட்டது.

G.S.விஜயகுமார் 2 . 770 சென்ட் சொத்தை 2022 ஆம் வருடம் ரமணிபாய்க்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குமாரபிள்ளைக்கு 2 . 345 சென்ட் சொத்து உரிமைப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. 2008 ஆம் வருடம் குமாரபிள்ளை கேரளாவில் நெடுங்கண்டம் என்ற ஊரில் வைத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான் ஆனால் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது.

குமாரபிள்ளை சுமார் 45 வருடமாக கேரளாவில் குடியிருந்து வந்தார் சரிதான். குமாரபிள்ளை தாவா சொத்தில் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் அவர்களுடைய பாகத்தை அவர்கள் ஏற்கனவே விற்றுவிட்டு சென்றுவிட்டார்கள். குமாரபிள்ளைக்கு உரிமைப்பட்ட சொத்து தற்போது ரமணிபாய்க்கு உரிமைப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருக்கிறதா என்றால் அவ்வாறு இல்லை. குமாரபிள்ளைக்கு உரிமைப்பட்ட சொத்து ரமணிபாய்க்கு எதிரிடை அவகாச உரிமையின் அடிப்படையில் வந்தது என்றால் சரியல்ல.

தாவா சொத்து 9 சென்ட் என்று இருந்தாலும் கிடப்புபடி 8. 115 சென்ட் சொத்துதான் உள்ளது என்றால் அளந்து பார்க்கவில்லை. 8. 115 சென்ட் சொத்து ரமணிபாயின் அவகாசத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து 9 சென்ட் சொத்தில் எனது அம்மா மாதவி அம்மாவிற்கு எந்தவிதமான ஆவணங்கள் எழுதுவதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கில் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அதன் விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனக்கோ 1 முதல் 5 ஆம் பிரதிவாதிக்கோ எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தென் கிழக்கு பகுதியில்தான் கிருஷ்ணகுமாரின் 3 சென்ட் சொத்தில் வீடு இருக்கிறதாஎன்றால் இருக்கிறது. கிருஷ்ணகுமாருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கும் கிருஷ்ணகுமாரின் வீட்டிற்கும் இடையில் ஏதாவது காம்போண்ட் சுவர் இருக்கிறதா என்றால் இல்லை. ரமணிபாயும் 5 ஆம் பிரதிவாதியும் மேற்படி இடத்தில் வேலி போட்டுக்கொண்டிருந்த சமயம் நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கிருஷ்ணகுமாரும் அவரது மனைவியும் சேர்ந்து ரமணிபாயையும் 5 ஆம் பிரதிவாதியையும் இடையூறு செய்தோம் என்றால் இல்லை. கிருஷ்ணகுமாரின் மனைவி ேஹமா 5 ஆம் பிரதிவாதியை பிடித்து தள்ளியும் கல்தூணுக்கும் சீட்டுக்கும் சேதம் ஏற்படுத்தினார்கள் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

நான் அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தேன் அங்கு கல்தூண் மற்றும் சீட் ஆகியவை யில் எந்த சேதமும் ஏற்படவில்லை தற்போதும் எந்த சேதமும் இல்லாமல் நல்ல நிலையில் இருக்கிறது. மேற்படி சம்பவத்தின் அடிப்படையில் மாண்புமிகு பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக் குஎண் 48/2023 என்ற வழக்கு

ரமணிபாயும் 5 ஆம் பிரதிவாதியும் வாதிகளாக கிருஷ்ணகுமார் அவரது மனைவி ேஹமா, மற்றும் அவரது பிள்ளைகள் கார்த்திக், விவேக் ஆகியோரை பிரதிவாதிகளாக தற்போது வழக்கு நிலுவையில் இருக்கிறது அது பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொல்லி கேள்விப்பட்டுள்ளேன்.

நான் கல்தூண் மற்றும் சீட் சேதம் அடைந்திருப்பதை நான் நேரில் பார்த்துக்கொண்டிருக்கும் புகைப்படத்தை அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக கரம் கட்டிய ரசீது எதுவும் இல்லை என்றால் எனது அம்மா பெயரில் இருக்கிறது. என் பெயரில் தாவா சொத்திற்கு கரம் கட்டிய ரசீது எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படி எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

இளஞ்சிமூட்டு வீட்டடி புறயிடத்தில் என் அம்மாவிற்கிருந்த எல்லா உரிமையும் ஏற்கனவே கிரையம் கொடுத்துவிட்டார் என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.